பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
15 07 2024 **MONDAY** **7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்திக்கான முனையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள உத்தரப்பிரதேசம், குஜராத் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- நாட்டின் ஏற்றுமதி கடந்த மாதம் ஐந்து புள்ளி நான்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- கர்நாடக அணைகளிலிருந்து காவிரியில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் தமிழக எல்லையான பிலிகுண்டுலு வந்தடைந்தது.

- பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டு சென்றது.

-இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>>

பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்யும் பொதுத்துறை நிறுவனங்கள், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

இன்று பெங்களூருவில் இந்துஸ்தான் ஏரோநாட்டிக் லிமிடெட் நிறுவனத்தை ஆய்வு செய்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

சுயசார்பு இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதில் இந்த நிறுவனத்தின் பங்களிப்பு முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

உலக அளவில் பாதுகாப்பு தளவாடங்களுக்கான உற்பத்தி முனையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த மாதத்தில் மட்டும் ஏற்றுமதி அளவு ஐந்து புள்ளி நான்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பொறியியல் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி பத்து புள்ளி இரண்டு ஏழு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், மின்னணு சாதனங்களின் ஏற்றுமதி 16 புள்ளி ஒன்பது ஒன்று சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமம், 100 நாட்களில் நூறு ரகங்கள் மற்றும் நூறு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வேளாண்துறை செயலர் திரு Himanshu Pathak கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஒரு விஞ்ஞானி – ஒரு பொருள்" என்ற திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இயற்கை வேளாண்மைக்கும், மண் வளத்திற்கும், விதை தொழில்நுட்பத்திற்கும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமம் கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த குழுமத்தின் நிறுவன மற்றும் தொழில்நுட்பத் தினம் இன்று தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், நிறுவன தின நிகழ்ச்சிகளை நாளை தொடங்கிவைக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் வேளாண்துறை இணையமைச்சர்களும் பங்கேற்கவுள்ளதாக திரு Himanshu Pathak தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

எல்லைப்பகுதியில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதென இந்தியாவும், பங்களாதேஷும் முடிவு செய்துள்ளன.

இருநாடுகளுக்கு இடையே எல்லைப் பாதுகாப்புப்படை அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்களின்போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சர்ச்சைக்குரிய பகுதிகளில் கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>>

தில்லியில் மின்கட்டண உயர்வை எதிர்த்து பிஜேபி சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதில் அக்கட்சியின் நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தில்லி பிஜேபி தலைவர் திரு Virendraa Sachdeva, கட்டண உயர்வை ஆம் ஆத்மி அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் தேர்வு முறைகேடுகளை களைவதற்கு வகை செய்யும் வரைவு மசோதாவிற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு Pema Khandu தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு சிறை தண்டனையும், ஒரு கோடி வரை அபராதம் விதிக்கவும் இந்த வரைவு மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதா வரும் 19-ஆம் தேதி தொடங்கவுள்ள சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படும் என்றும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்ததாக கூறி சிபிஐ பதிவு செய்த வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி கர்நாடக துணை முதலமைச்சர் திரு D K சிவகுமார் தாக்கல் செய்த மனுவினை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

நீதிபதிகள் திரு Bela M Trivedi, திரு Satish Chandra sharma அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

வழக்கிலிருந்து விடுவிப்பதற்கான முகாந்திரங்கள் எதுவும் இல்லை என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

மேகாலயா முதலமைச்சர் திரு Conrad K Sangma பிரதமர் திரு நரேந்திர மோடியை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இதேபோல், ஜார்கண்ட் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரனும் பிரதமரை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

நேபாளத்தின் பிரதமராக திரு K P Sharma Oli இன்று பதவியேற்றுக்கொண்டார்.

அந்நாட்டு அதிபர் திரு Ramchandra Paudel அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

21 அமைச்சர்களும் பதவியேற்றுக்கொண்டனர்.

Prakash Man Singh மற்றும் Bashnu Prasad Paudel துணைப்பிரதமர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

<<<<<<<>>>>>>>

குஜராத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். ஆறு பேர் காயமடைந்தனர்.

அகமதாபாத் - வதோதரா அதிவிரைவுச்சாலையில் Chikhora கிராமம் அருகே நின்று கொண்டிருந்த பேருந்து மீது லாரி மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

பேருந்தின் டயர் வெடித்ததன் காரணமாக சாலையோரம் அந்த பேருந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

இதில் பேருந்து ஓட்டுநர் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளதாகவும், அவர்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு கனமுதல் மிக மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மகாராஷ்ட்ரா, குஜராத், கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மகாராஷ்ட்ராவில் பெய்துவரும் கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கொங்கன் வழித்தடத்தில் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குஜராத் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்தது.

அம்மாநிலத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமுதல் மிக கனமழை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அஸ்ஸாம், குஜராத், உத்தரப்பிரதேச மாநிலத்தில் மழை வெள்ள பாதிப்பு குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அம்மாநில முதலமைச்சர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டறிந்தார்.

மழை - வெள்ள பாதிப்புகளை சீரமைப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு அமித் ஷா உறுதியளித்தார்.

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து காவிரியில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் தமிழக எல்லையான பிலிகுண்டுலு வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - தருமபுரி தண்டபானி – 30 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>>

நீலகிரி மலை ரயில் யுனஸ்கோ அந்தஸ்து பெற்று 19 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, குன்னூர் ரயில் நிலையத்தில் சுற்றுலா பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

மலை ரயில் பாதுகாப்பு இயக்கம் சார்பில், இந்த தினம் கொண்டாடப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் - 34 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

Anjum Moudgil, Sift Samra, Elavenil உள்ளிட்டோர் இந்திய அணியில் இடம்பெற்றுள்ளனர்.

------------

உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat singh மற்றும் Shaurya bawa காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், ஜப்பானின் Shaurya Bawa 11-9, 5-11, 11-5, 13-11 என்ற செட் கணக்கில், அர்ஜென்டினாவின் Segunda Portabales –ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், Anahat singh 11-6, 13-11, 11-2 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Akari Midorikawa –வை வென்றார்.

<<<<<<<END>>>>>>>